# வளலாயில் புலிகள்-படையினர் கடும் மோதல்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANACU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 22 இதழ் 324
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6-1-1994


(யாழ்ப்பாணம்)

வளலாயில் இருந்து அச்சுவேலி, பத்தமேனி பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர்க்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலை அடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கஞ்சி இராணுவம் பின்வாங்கி மீண்டும் முகாமைச் சென்றடைந்தது.

நேற்றுக்காலை 7-30 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் இராணுவத்தரப்பில் இருந்து கடுமையான ஷெல் தாக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## பலாலி படையினர் ஷெல், கலிபர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதி நோக்கி கடும் ஷெல் தாக்குதலும், கலிபர் தாக்குதலும் இடம் பெற்றது.

இத்தாக்குதல் அச்சுவேலி, தோப்பு, இடைக்காடு, வளலாய் பகுதியை நோக்கி நடத்தப்பட்டது.

இதேவேளை நேற்றுக் காலை 9-45 மணியளவில் வடமராட்சி கரணவாய்ப் பகுதியை நோக்கி பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன. வயோதிபர் ஒருவர் காயமடைந்தார். (வ)

● புக்காரா, சுப்பசொனிக் கொடூரம்

# தாவடி, சாவகச்சேரி பகுதியில் குண்டு வீச்சிற்கு எழுவர் பலி

## பலர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தாவடி மற்றும் சாவகச்சேரி பகுதியில் நேற்று நண்பகல் புக்காரா மற்றும் சுப்பசொனிக் விமானங்கள் மேற்கொண்ட மிகக் கொடூரமான தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பெருமளவு சேதமடைந்தன. சில நிமிட நேரத்தில் இந்தக் கொடூரச் செயல் இப்பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

## தாவடியில் ஐவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தாவடிப்பகுதியில் நேற்றுக் காலை 'புக்காரா' விமானம் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் ஐவர் ஸ்தலத்திலே உடல் சிதறிப்பலியானார்கள். இரு வீடுகள் முற்றாக தகர்க்கப்பட்டன. மேலும் பல வீடுகள் பெருமளவு சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10-30 மணியளவில் யாழ்ப்பாணம், மற்றும் தாவடி, கொக்குவில் பகுதிகளை சுற்றி புக்காரா மற்றும் பொம்மர்கள் பல தடவைகள் வட்டமிட்டன. திடீரென புக்காரா விமானம் தாவடிப்பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் குடியிருப்புகள் மீது ஒரே நேரத்தில் இரு குண்டுகளை வீசித்தாக்கியது.

இக்குண்டு அருகிலிருந்த இரு வீடுகள் மீது வீழ்ந்து வெடித்துச் சிதறின. இதனால் குழந்தை பெண்கள் உட்பட ஐவர் உடல் சிதறிப் பலியானார்கள். இதில் மகேஸ்வரன் லோஜிதா (2 வயது குழந்தை)

(5ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இருவர் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் 'புக்காரா' விமானமும் சுப்பசொனிக் விமானங்களும் நேற்று நண்பகல் குண்டுவீச்சு மற்றும் ரொக்கட் தாக்குதலை நடாத்தியதில் கல்லூரிக்கு சென்ற மாணவி ஒருவர் ஸ்தலத்திலே பலியானார். குடும்பஸ்தர் ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். அறுவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 11-15 மணியளவில் சாவகச்சேரி பகுதியை சுற்றிவட்டமிட்ட புக்காரா விமானங்கள் தெருடாவில் இராம்புவில் பகுதியில் குடியிருப்புகள் மீது அடுத்தடுத்து மூன்று குண்டுகளை வீசின. பருத்தித்துறை வீதிக்கு அருகில் வீழ்ந்து வெடித்த குண்டினால் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு தனது பரீட்சை முடிவுகளை பார்க்கச் சென்ற க. பொ. த (சா த) மாணவியான மட்டுவில் கிழக்கை சேர்ந்த புவனேந்திரராணி கோபாலகிருஷ்ணன் (வயது 16) ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியானார்.

புக்காராவின் மற்றைய இரு குண்டுகளும் அருகிலிருந்த பனைவெளியில் வீழ்ந்து வெடித்ததால் மரங்கள் பல சேதமடைந்தன. புக்காராவின் தாக்குதல் சுமார் 10 நிமிட நேரம் இடம்பெற்றது. புக்காராவினதும், சுப்ப

(5ம் பக்கம் பார்க்க)

## சுப்பசொனிக் ரொக்கட் வீச்சு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் நேற்று நண்பகல் 'புக்காரா' விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்திவிட்டு சென்ற ஒரு சில நிமிடத்தில் இரு 'சுப்பசொனிக்' விமானங்கள் மின்னல் வேகத்தில் ரொக்கட் மற்றும் கலிபர் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் நான்கு பெண்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரியை மையமாக வைத்தே இவ்விரு சுப்பசொனிக்குகளும் மாறி மாறி பரவலாக ரொக்கட், கலிபர் தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதலினால் சாவகச்சேரி இராம்புவிலைச் சேர்ந்த கே. தங்கம்மா 65 வயது, நடராஜா இரத்தினம்மா (48 வயது) இராமவில்லைச் ஜெயலாமணி (35 வயது) முத்துசாமி தங்கமணி (30 வயது) ஆர். சின்னத்தம்பி (வயது 55) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

விமானத் தாக்குதல் நடைபெற்ற பகுதி குடியிருப்புகள்

(5-ம் பக்கம் பார்க்க)

★ உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்:

## கிழக்கில் வேட்பாளர் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சுயேட்சை முன்னணியைச் சேர்ந்த ஒரு தமிழ் வேட்பாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேர்தல்களில் பங்கேற்கமுனையும் ஏனையவர்க்கும் அதே கதி தான் என்ற வாசகம் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்று அவரது உடலருகே இருந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. க. உறுப்பினராக செல்லச்சாமி இருப்பார்

(கொழும்பு)

இ. தொ. கா. வின் பொதுச் செயலாளரான திரு எம். எஸ் செல்லச்சாமி தமது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் கட்சியில் சாதாரண உறுப்பினராக இருக்க அனுமதிக்கப்படுவாரென கட்சித்தலைவர் திரு எஸ் தொண்டமான் கூறியுள்ளார்.

இதேவேளை தம்மை பதவி நீக்கம் செய்யும் அறிவிப்பு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் இது குறித்து தாம்

(2ம் பக்கம் பார்க்க)

## வயோதிபப் பெண் அதிர்ச்சியால் மரணம்

(கோப்பாய்)

நேற்று காலை இடம்பெற்ற பாரவூர்தி விமானத்தாக்குதலின் போது பயத்தினால் சேர்ந்த 60 வயது பெண் ஒருவர் அதிர்ச்சியால் மரணமானார். அதிர்ச்சியால் மரணமான மேற்படி பெண் கந்தசாமி அருந்ததியம்மா எனும் 7

(2ம் பக்கம் பார்க்க)

## சனிக்கிழமை மீண்டும் புதைகுழி தோண்டப்படும்

### விசாரணைக்கும் உத்தரவு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய சூரியகந்த பகுதியில் மனித எலும்புக் கூடுகள் நிறைந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்து பல எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் மீட்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தும்படி சி. ஐ. டி. பிரிவினரை பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா

(2ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் வீடுகளிலும் பல எலும்புக்கூடுகளை மீட்கலாம்

(கொழும்பு)

அரசின் முக்கிய பிரமுகர்களின் வீட்டுத் தோட்டங்களை தோண்டினால் பல எலும்புக் கூடுகளை கண்டெடுக்க முடியும் என திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ரகசிய புதைகுழியில் 15 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டமை குறித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இவரது ஆதர

(5-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### பழைய புத்தகங்கள்

ஒரு நல்ல வாசகர் தெரிந்தெடுத்து வாசித்த தமிழ், ஆங்கில நாவல்கள், பல துறைக் கட்டுரை நூல்கள், உயர் வகுப்பு மாணவர்க்கேற்ற கணிதம், கல்வி, உளநூல், பௌதீகம், தமிழ், இந்து நாகரீகம் பாடநூல்கள் மலிவு விலையில். ஆனந்தா புத்தகசாலை, 236, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (எ 3738)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசாவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி கே. இராசரத்தினம் 181, 3-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (இ-689)

### தேவை

தமிழ், ஆங்கிலம், இலக்கியம், இலக்கணம், சரித்திரம் அரசியல் ஆகியவற்றில் திறமையுள்ள இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புத்தகங்கள் எழுதி அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடன் 14-1-94க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். விளம்பர இலக்கம்: எ - 3741, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ-3741)

## இளம்பெண் பலி

(யாழ்ப்பாணம்)

குப்பிளானில் நேற்றுமுன்தினம் தோட்டக்கிணறு ஒன்றில் தண்ணீர் அள்ளிய இளம்பெண் ஒருவர் தவறிவிழுந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் போது இடைவழியில் மரணமானார்.

இதே இடத்தைச் சேர்ந்த அருள்ராஜ் ஜமுனாதேவி என்ற இளம் குடும்பப்பெண்ணே இச்சம்பவத்தில் மரணமானவராவார். (இ)

செஞ்சிலுவை

## வன்னியில் தபால் சேவை

(வவுனியா)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தபால் பொதிகளை அடுத்த வாரம் முதல் எடுத்துச் செல்ல ஆரம்பித்துள்ளது.

கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக மேற்படி இரு மாவட்டங்களுக்குமுரிய 818 தபால் பொதிகளை வவுனியா இராணுவத்தினர் தடுத்து வைத்திருந்தனர்.

அடுத்த வாரம் முதல் இந்த தபால் பொதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மூலம் இப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியது. -வி-இ

விற்பனையாகிறது!
அறிவுக் களஞ்சியம்
19
(எ-3739)

புலோலி மாதர் கிராம முன்னேற்றச் சங்க
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
### ஒத்திவைப்பு
01 - 01 - 94ல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த
°° சீட்டிழுப்பு °°
தவிர்க்கமுடியாத காரணத்தால் 14-04-94-ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.
(எ-3737) நிர்வாகிகள்.

### யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
புதிய வகுப்புகள்
9-1-94 காலை 7-30 மணி முதல்
(ஏ-3734) ஆரம்பமாகின்றன.

யாழ். வர்த்தகர் சங்கம்
## கலந்துரையாடலும் கருத்தரங்கும்
யாழ். நகர் சகல வர்த்தகர்களுக்குமான
★ ஓர் கலந்துரையாடல் ★
07 - 01 - 94 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2-30 மணிக்கு
நவீன சந்தை மேல்மாடி
யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில்
நடைபெறும்.

★ இன்றைய போர்க்கால சூழ்நிலையில் குறிப்பாக வர்த்தகர்களின் பங்களிப்பு பற்றி விரிவான கலந்துரையாடல் அரசியல்துறை பிரமுகர்களால் நடாத்தப்படும்.

°° சகல வர்த்தக உரிமையாளர்களும் தவறாது நேரில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்

செயலாளர்.

(எ-3740)

## நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரச செயலகத்தில் பயிலுனர் தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தெரிவுக்கான நேர்முகப்பரீட்சையை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நடாத்தினார்.

### இ. தொ. கா.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் திரு. செல்லச்சாமி கூறியுள்ளார்.

தற்போது இவருக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டுள்ளதாம். (இ)

### வயோதிபப்பெண்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் தாயாவார்.

இதேவேளை நேற்றுக்காலை குடாநாட்டின் பலபகுதியிலும் புக்காரா சில மணி நேரம் வட்டமிட்டு தாக்குதல் நடாத்த முயன்றவேளை பாடசாலை மாணவர்களும் பெரும் அச்சமடைந்திருந்தனர். (இ)

### சனிக்கிழமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணித்துள்ளார்.

சி ஐ டி பகுதியினர் தமது விசாரணை முடிவுகளை எம்பிலிப்பிட்டி நீதிமன்றில் சமர்ப்பித்து நீதிவிசாரணைகளுக்கு உதவுவார்களாம். கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளை சட்டவைத்தியரின் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏழு மண்டை ஓடுகளும் சில எலும்புக்கூடுகளுமே இங்கிருந்து மீட்கப்பட்டதாக கூறிய பொலிஸ் மா அதிபர் சில பத்திரிகைகளில் இது பற்றி பெரிதுபடுத்தப்பட்ட செய்திகள் வந்துள்ளதாக கூறினார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய தற்போது இந்த புதைகுழிப் பகுதி பொலிஸாரின் பாதுகாவலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை இப்பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் நடாத்தி (புதைகுழிகளை தோண்ட) நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த புதைகுழி விவகாரம் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக அவப்பெயரை ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சியா என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொறுப்பான அரசு தரப்பினர் கூறியுள்ளனர். (இ)

# 3-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



செல்வன்
### அப்பாப்பிள்ளை துஸ்யந்தகுமார்
(சின்னக் கண்ணு)

மலர்வு: 02 - 04 - 1984
உதிர்வு 09 - 01 - 1991

கண்விழியால் காத்திருந்தோம்
கண்ணு உன் திருவுருவை - எம்
நெஞ்சத்தை நெகிழவைத்து
நெடுந்தூரம் சென்றனையோ

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணிமார்
அக்காமார், மாமன்மார், அத்தைமார்,
அன்ரிமார், பேரன், பேத்திமார்.

82/3, பருத்தித்துறை, றோட்,
3-ம், ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(இ 697)

## தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியம்

" புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் "

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் மேற்படி நிதியத்தைப் பொங்கல் திருநாளன்று ஆரம்பிக்கவுள்ளனர். மாவட்ட, கோட்ட மட்டங்களில் நிதியம் ஆரம்பித்து வைக்கப்பெறும்.

இந்நிதியம் பேரவையின் நோக்கங்களான தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டை ஊக்குவித்தல், ஆசிரியர்களின் வாண்மையை வளர்த்தல் என்பனவற்றிற்காகப் பயன்தரும் வகையில் உபயோகிக்கப்பெறும்.

நிதியளம் படைத்தவர்கள்,
நலன்விரும்பிகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அறநிலையங்கள், தொண்டர் நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களிடமிருந்து நிதி அன்பளிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அன்பளிப்புகளை வழங்குவதற்கான விபரங்கள், செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும்.

தொடர்பு கொள்ள விரும்புவோர்:

பெரும் பொருளாளர்
தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை
இல. 19, நாயன்மார்கட்டு வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(எ-3744)

# போரை முடிவுக்கு கொண்டுவருமாறு புத்தி ஜீவிகள் அரசிடம் வலியுறுத்து!

(கொழும்பு)

''வடக்கு-கிழக்குப் போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். இது அவசரமும் அவசியமுமாகும். பேச்சுவார்த்தை மூலமே இதனை தீர்க்கலாமே தவிர இராணுவத் தீர்வினால் முடியாது.''

கடந்த வாரம் கொழும்பில் பத்திரிகையாளர், அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள் அடங்கிய புத்திஜீவிகளின் மாநாட்டுக் கருத்தரங்கில் இக்கருத்து ஏகமனதாக வலியுறுத்தப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிலையத்தில் நடந்த ''சமாதானத் திற்கான பாதை'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பல சமூகத்தையும் சேர்ந்த பல அறிஞர்கள் கலந்துகொண்டார்கள்.

அங்கு பேசியோரின் ஏகோபித்த கருத்துப்படி வடக்கு—கிழக்கு யுத்தத்தால் நாடு அழிந்து பேராயுள்ளதாகவும் பாதுகாப்புக்கு ஒதுக்கும் பணத்தால் அபிவிருத்தி பாழாகிறதாகவும், நாளாந்த ஆறாக ஓடுவதால் சகலரும் சமாதானத்தையே விரும்புவதாகவும், இதற்கு உடன் சமாதானம் கொண்டுவரப்பட்டு ஜனநாயக முறைகள் சீரழியாமல் பாதுகாக்கப்படவும் வேண்டும் என வலியுறுத்தினர்.

முக்கிய பேச்சாளரான வணபத்தேகம சமிதா தேரர் பேசுகையில்: விசாரைகளுக்கு வரும் படையினரின் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் போர் முடிவுக்கு வந்து உயிருடன் வீடு திரும்ப வேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் இந்தப் போர் அவர்களுக்கு ஒரு தண்டிபடியென்றும் கூறினார். மேலும்கொழும்பிலும் மேல்நாடுகளிலும் வாழும் சிங்கள தமிழர்களும் பார்க்க நாட்டுப்புற இளைஞர்களே போரில் மடிகிறார்கள். ஏகாதிபத்தியத்திலும் பார்க்க தேசியவாதம் பயங்கரமானது. சமூக ஒற்றுமை அவசியமானது என்றார்.

வண. திஸ்ஸ பாலசூரிய பேசும்போது: ஆட்சியமைத்த அரசுகள் யாவையும் இம்மோதல் பிரச்சினைக்கு காரணகர்த்தாக்கள். வடக்குக்கிழக்கிலுள்ள பெற்றோர் சமாதானத்தையே விரும்புகிறார்கள், அங்குள்ள மக்களுக்கு நம்பிக்கையை நாம் ஊட்டவேண்டும். மாவட்ட சபைகள் தோல்வி கண்டன. தற்போது மாகாண சபைகளும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. ஆகவே அரசியல் சட்டத்தில் கூடிய அதிகாரம் வழங்கும் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்றார்.

ரோஹான் குணரத்தின பேசும்போது: 1979 ல் 22பேருடன் ஆரம்பித்த புலிகள், தற்போது 12 ஆயிரம் பேர் கொண்ட படையையே உருவாக்கியுள்ளார்கள் என்றார்.

ஜெகன் பெரேரா பேசியபோது: ராணுவமேபோரினால் அலுத்துப் போயுள்ளது. அரசு ஒரு தீர்வை ஏற்படுத்தினால் அவர்கள் ஏற்கத்தயாராகவுள்ளார்கள். பேச்சுக்களில் பௌத்த குருமாரையும் சேர்க்க வேண்டுமென்றார்.

டாக்டர் ஜயதேவ உயன்கொட பேசுகையில்: சர்வதேச மத்தியஸ்தத்தில் அல்லது இரகசிய பேச்சு மூலம் இதனை தீர்க்க வேண்டும். சமாதானம் சிதைவுற்றுள்ளது. இதனை நலிவிலிருந்து மீட்கவேண்டும் என்றார்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் பேசுகையில்: இனப்பிரச்சினைக்கான மூலகாரணங்களை காரணகர்த்தாக்களுடன் எடுத்துரைத்தார். மக்கள் அரசை ஒரு தீர்வுக்கு வருமாறு வலியுறுத்த வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அரங்கில் பல செல்வாக்கு இருப்பதனாலும் அவர்களுக்கு தமிழர்களும் ஆதரவாக இருப்பார்கள் என்பதனாலும் சர்வதேச மத்தியஸ்தத்தை இங்கு கலந்துகொண்ட அநேகமானோர் விரும்பவில்லை. சிங்களவர்கள் சர்வதேச மத்தியஸ்தம் என்றாலே பயப்படுவதாகவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளையும் புலிகளையும் பேச்சில் ஈடுபடவேண்டும் என்றும் போரை நிறுத்திக் கொள்ளுமாறு பொது ஸ்தாபனங்கள் புத்திஜீவிகள் அழுத்தங்கள் கொடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி பலர் உரையாற்றினர்.

ஜனாதிபதியின் பயங்கரவாதம் என்ற கூற்றையும் அவர்கள் மறுதலித்தனர். எவருடைய பேச்சிலும் சமாதான தாகம் ஒலித்ததைக் காணமுடிந்தது. —சே

---

# இங்கிருப்பது இனப்போரே இருநாட்டு போரல்ல

## மட்டு. எம். பி. கூறுகிறார்

(கொழும்பு)

''இந்த நாட்டில் ஓர் இனப் போராட்டமே நடைபெறுகின்றதேயொழிய எந்த வகையிலும் இரு நாடுகளுக்கிடையில் போர் நடைபெறவில்லை. வடக்கில் தேவாலயங்கள், கோவில்கள், வைத்தியசாலைகள், சந்தைகள், பொது நிலையங்கள்மீது தொடர்ந்து நடாத்தப்படும் குண்டு வீச்சுகள் எந்த வகையிலும் அரசினால் நியாயப்படுத்தப்படவே முடியாது.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் சாவகச்சேரிப் பகுதியில் கடந்த வாரம் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சைக் கண்டித்து அனுப்பிய அவசரத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றி அவர் தமது தந்தியில் மேலும் குறிப்பிடுகையில்,—

சர்வதேச போர் முறைகளுக்கு முற்றும் முரணான முறையிலேயே வடக்கில் குண்டு வீச்சு சம்பவங்களை விமானப்படையினர் தொடர்ந்து நடாத்தி வருகின்றார்கள். கடந்த வாரம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகாமையில் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான குண்டுவீச்சினால் 10 பொதுமக்கள் பலியானதுடன் அறுபது பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் போரில்கூட தேவாலயங்கள், வைத்தியசாலைகள், பொது இடங்கள் போன்றவற்றின்மீது குண்டு வீச்சுகளை நடாத்தக்கூடாது என்று சர்வதேச போர் முறை விதிகள் கண்டிப்பாகக் கூறுகின்றன. வடபகுதியில் இதுபோன்ற பொது இடங்களில் பல தடவைகள் விமானக் குண்டு வீச்சு நடாத்தப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்க ஓர் விஷயமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். —வி-கி-ரி

---

# போர்வையில் தீப்பிடித்து வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

நித்திரையில் இருந்து எழுந்த வயோதிபர் ஒருவர் சுருட்டுப்பற்றவைத்தபோது போர்வையில் தீப்பிடித்து எரிந்ததில் உடல் முழுவதும் எரிந்து படுகாயமடைந்தார்.

நல்லூரில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மார்முத்து பொன்னுத்துரை (வயது 81) என்ற வயோதிபரே எரிகாயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உறவினர் இன்றி தனியாக வசித்துவந்த இவர் தீப்பற்றியபோது கூக்குரல் இட்டதைக்கேட்ட அயலவர்களே உடனடியாக அங்கு விரைந்து அவரின் தீயை அணைத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர்.

---

# இலங்கையில் இவ் ஆண்டிலும் அமைதியற்ற நிலை நீடிக்கும்

## சோதிட ஆலோசகர் கணிப்பு

(கொழும்பு)

பிறந்துள்ள புத்தாண்டு உலகின் பல பகுதிகளிலும் அமைதியற்ற சூழலையே ஏற்படுத்துவதுடன் சோவியத் ஜனநாயகக் குடியரசில் அரசியல் புரட்சிகளையும் ஏற்படுத்தும். இவ்வாறு ''சண்டே ஐலண்ட்'' சோதிட ஆலோசகர் சுகததாச இவ் வாண்டுக்கான கணிப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது கணிப்பில், இலங்கையைப் பற்றிக் குறிப்பிடுகையில் தற்போது காணப்படும் அமைதியற்ற நிலை சில காலத்துக்கு நீடிக்கும். மக்களுக்கான நலத்திட்டங்கள் அதிகரிக்கப்படுவதுடன் அதனால் மக்களும் நன்மையடைவர். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதுடன், போரினால் செலவினங்கள் உயரும், வெளிநாட்டு உதவிகள் அதிகரிக்கும். அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் பலன் தராது. சகல பிரிவினரின் ஆதரவும் அரசுக்கும் கிட்டுவதால் உருவாகும் சிக்கல்கள் தீர்க்கப்படும் என்றும் நவம்பர் மாதக்கடைசியின் பின்னர் சில மாற்றங்கள் நிகழலாம்.

உலக அரங்கில் சில நாடுகளில் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் யுத்த சூழ்நிலைகள் விடுபடும். இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஹொங்கொங் நாடுகளில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும். நவம்பர் மாதத்தின் பின் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், பிரிட்டிஷ்பிரதமர் ஜோன் மேஜர் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனசிர் பூட்டோ ஆகியோருக்கு கஷ்டமான காலமாகும். இஸ்ரேல் பிரதமர் பாலஸ்தீனிய விடுதலை அமைப்புத் தலைவர் சோவியத் ஜனநாயகக் குடியரசு ஜனாதிபதி பொறிஸ் எல்ஸ்ரின் ஆகியோருக்குக் கிரகநிலைகள் சாதகமாகவில்லை.

இத்தினரவில் இனக்கலவரங்களும் மதக் கலவரங்களும் பிரதமர் ராவிற்கு நெருக்கடியைத் தரும். பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அத்வானிக்கு அரசியல் பிரகாசமுண்டு. இவ்வாண்டு உதயமாகும்போது சூரியன், செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கிரகங்கள் தனுராசியிலும், வியாழன் துலாராசியிலும், சனி கும்பத்திலும், ராகு விருச்சிகத்திலும், கேது இடபத்திலும் சஞ்சாரம் செய்வதால் இந்நிலைமை உருவாகியுள்ளது' மூன்று கிரணங்களும் நிழலுவதாகக் குறிப்பிட்டுள்ளார். —எஸ் க

---

காரைநகரில்

# வயோதிபப் பெண் கொலை; நகைகள் கொள்ளை

(காரைநகர்)

காரைநகர் அங்கிலின் வீதி பகுதியில் 55 வயதுப்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தனிமையில் வசித்து வந்த இவரின் சடலம் கைகள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் இவரது வீட்டின் பின்புறத்தில் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முருகேசு கனகம்மா என்ற இந்தப்பெண்ணின் சடலத்தை அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பெண் கடந்தமாதம் 17ம் திகதிக்கும் 22-ம் திகதிக்கும் இடையில் கொல்லப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இவரது வயோதிப கணவர் கடந்த பல மாதங்களாக பலாலி இராணுவமுகாமில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட பெண்ணிடமிருந்து நாற்பதுக்கு மேற்பட்ட பவுண் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம். —சி

---

# குண்டு துளைக்காத கார்கள் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

ஜேர்மனியிலிருந்து தருவிக்கப்பட்ட ஐந்து கோடி ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத இரண்டு சொகுசு கார்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து சுங்கவரி செலுத்தாமல் வெளியே கொண்டுவர எடுக்கப்பட்டபோது அவை சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது போன்ற குண்டு துளைக்காத சொகுசு கார்கள் முன்னர் இலங்கைக்கு தருவிக்கப்படவில்லையெனவும், இந்த இரண்டு கார்களும் 'நிஸான்' ரகத்தைச் சேர்ந்தவை என பத்திரங்களில் பதிந்து அவற்றை 'கொண்டேய்னர்'களுடனேயே வெளியில் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுங்க அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே துறைமுகத்திலிருந்து வெளியே கடத்தப்பட்ட இந்த கார்கள் கண்டு பிடிக்கப்பட்டன. (இ-வி)

---

# கணக்காளர் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசசேவையின் கீழ் கணக்காளர் தரம் II/II க்கு டிசம்பர் 20 ம் திகதி நடைபெறவிருந்த மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை பின்போடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ள அனுமதி அட்டை இப்பரீட்சைக்குச் செல்லுபடியாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. 162

---

# யாழ். நகரில் விரைவில் விடுமுறை சந்தை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை மன்றம் பொதுமக்களின் நன்மைகருதி விடுமுறைநாள் சந்தையொன்றை யாழ் நகரில் பழைய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் ஆரம்பிக்கவுள்ளனர் இச்சந்தை விடுமுறை நாட்களில் மட்டும் நடைபெறும். விஷேட தினங்களை முன்னிட்டு அத்தினத்துக்கு முதல்வாரமே இச்சந்தை நடைபெறவுள்ளது.

இந்த சந்தை எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. —162வி

யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

உடல் நோயற்று இருப்பது முதல் இன்பம்; மனம் கவலையற்று இருப்பது இரண்டாவது இன்பம்; உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றாவது இன்பம். — மு.வ.

# தி. மு. க. கருணாநிதியின் சொத்தல்ல
# தொண்டர்களுக்கும் அதில் பங்குண்டு

(சென்னை)

தி. மு. க. கருணாநிதியின் குடும்பச்சொத்தல்ல. எல்லாத் தொண்டனுக்கும் அதில் பங்குண்டு என்று வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். என்னை இழுத்துச் சென்று மன்னிப்புக் கேட்க முயற்சி நடக்கிறது. நான் ஏன் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

நீதிகேட்கும் நெடும்பயணத்தை துவங்கியுள்ள கோபாலசாமி அக்கூட்டத்தில் கூறியதாவது:- "இங்கு ஒரு சகோதரன் எனக்கு இரத்த திலகம் வைத்தார். நான் தடுத்தேன். தொண்டர்களின் இரத்தம் சிந்த நான் அனுமதிக்கமாட்டேன். ஜெயலலிதாவிடம் பணம் வாங்கியுள்ளான் என்று கூறுகிறார்கள். ஆட்டுக்கடாக்களை மோதவிட்டு ரத்தம் குடிக்க ஓநாய் காத்து இருக்கிறது என்று சொன்னீர்கள். யார் ஆட்டுக்கடாக்களை மோதவிட்டது. தூண்டிவிட்டது.

என்னைக் கொலைகாரன் துரோகி என்று சொன்னீர்கள். யார் துரோகி? மந்திரிசபை இரகசியத்தை வெளியிட்டது யார்? மருத்துவ கல்லூரியை கைவசப் படுத்தப்போகிறோம் என்று நள்ளிரவில் போனில் தகவல் சொன்னது யார்? அண்ணா அறிவாலயத்தை உங்கள் சொத்தாக நினைக்கலாம். ஆனால் அண்ணாதுரை எங்களுக்குச் சொந்தம். தொண்

## கோபாலசாமி உரை

டர்களுக்குச் சொந்தம். விடுதலைப்புலிகளை ஆபத்தானவர்கள் என்று செஞ்சி ராமச்சந்திரனே சொன்னார் என்று பேசினீர்கள். நான் செஞ்சி ராமச்சந்திரனிடம் இதுபற்றி கேட்டபோது அது பற்றி பேச விரும்பவில்லை என்று மட்டும் கூறினார்.

விடுதலைப்புலிகள் நாங்கள் தலைவனைக் காப்பாற்றுவேன் என்று எழுதிக்கொடு என்று வீரபாண்டி ஆறுமுகம் என்னிடம் கேட்டார். அப்போது நான் அவர்களிடம் இங்கே எங்கே விடுதலைப்புலிகள் இருக்கிறார்கள் என்னை அரசியலில் இருந்து அழிக்க முயற்சி அல்லவா நடக்கிறது. அவர்களின் முகத்திரையைக் கிழிக்காமல் விடமாட்டேன் என்று கூறினேன்.

அண்ணாதுரைபற்றி உனக்கென்ன தெரியும் அவரைப் பார்த்ததுகூட கிடையாது என்று நீங்கள் கூறலாம். நான் அண்ணாதுரையைப் பார்க்காது இருந்திருக்கலாம். ஆனால் அவர் எண்ணம் தெரியும். என் எண்ணங்கள் ... தாரங்கள் என் வாழ்வை திறந்த புத்தகம்.

சாதாரண தொண்டனை எனக்கே இந்தக்கதி என்றால் மக்கள் தலைவர் எம். ஜி. ஆரை எப்படியெல்லாம் பாடுபடுத்தியிருப்பீர்கள்" என்றும் அவர் கூறினார். -தி

## நமது நோக்கு

### வியூகம் விளங்குகிறதா?

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த வேண்டாம் எனப் பலர் குரல் கொடுத்து வருகிறார்கள். முஸ்லீம் காங்கிரஸ்கூட எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதைவிட கொழும்பில் உள்ள தமிழ் அரசியற் கட்சி ஒன்று காரணங்களை அடுக்கிக் காட்டி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இருப்பினும், அரசு தேர்தலை நடாத்தியே தீருவோம் எனக் கங்கணம் கட்டி நிற்பதேன்? தெரிவுக் குழுவின் தீர்வைத் தமிழ்க் குழுக்கள் எதுவுமே ஏற்கவில்லை. இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசு தவறிவிட்டது எனக் கண்டனக் குரல் எழுந்துள்ளது.

இவற்றை மூடி மறைத்து, கிழக்கில் நிர்வாகம் சீராக நடக்கிறது. தேர்தலையே நடாத்தியுள்ளோம் என்று உலகத்தவர் கண்களில் மண்ணைத் தூவும் முயற்சியா?

பேரினவாதிகளால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டார்களா? நிம்மதியாக, அரச பயங்கரவாதத்தின் தலையீடின்றி மக்கள் அங்கு மீண்டும் குடியேறும் வரை ஜனநாயகத் தேர்தல் நடாத்துகிறோம் என்பது நியாயமா?

அங்கு சிவில் நிர்வாகம் நடக்கிறதா? அடக்குமுறையால், இராணுவ நிர்வாகத்தால் நீதியான தேர்தல் நடாத்த முடியுமா?

இதேவேளை, கிழக்கில் தேர்தல் நடாத்தினால் யுத்தத்தில் வெல்லமுடியும் என ஜெனரல் லக்கி அல்கமா தெரிவித்திருக்கிறார். இதன் அர்த்தம் என்ன? வகுக்கப்படும் வியூகம் என்ன?

தென்னிலங்கையிலிருந்து வரும் சில பத்திரிகைக் கட்டுரைகள் மூலம், அரசின் உள்நோக்கம், வியூகங்கள் ஓரளவிற்கு வெளியே தெரியவருகின்றன.

முதலில், கிழக்கில் தேர்தல் நடாத்துகிறோம், அங்கு ஜனநாயகம் நிலவுகிறது, மக்களின் பிரதிநிதிகள் நிர்வாகம் நடாத்துகிறார்கள் என்ற மாய உரு உலகுக்கு காட்டப்படும்.

பின்னர், வடக்கில் மாத்திரம் பயங்கரவாதம் உண்டு, மக்கள் அங்கு தவிக்கிறார்கள், அவர்களை விடுவிக்க உதவவேண்டும் என்ற குரல் ஒலிக்கும். ஆடு நனைகிறதென்று ஓநாய் ஓலமிடும்!

அத்தோடு கிழக்கிலே, சில சலுகைகளை வழங்கி, வாய்க்குணவும் வசதிகளும் தாராளமாகத் தரப்படும். அவற்றில் மக்கள் மயங்கி விடுதலை உணர்வை இழப்பர். அங்கிருந்து படைகளைப் படிப்படியாக நீக்கி வடக்கிலே குவிக்க வாய்ப்பேற்படும்.

இது அவர்கள் வகுக்கும் வியூகம்; விளங்கிக் கொண்டு விழிப்படைய வேண்டியது எங்கள் கடமை!

● இவ்வருடம் பெரும் யுத்தம் நடைபெறலாம்

# ஆயிரக்கணக்கான தமிழர் அழியக்கூடிய அபாய நிலை?

(கொழும்பு)

1994-ம் ஆண்டு தமிழருக்கு பெரும் சோதனையான காலமாகவே அமையவுள்ளது. இவ்வாண்டில் இதுவரை காலமும் இல்லாத மிகப்பெரும் இராணுவ தாக்குதல்கள் நடைபெறவுள்ளதாகவும் இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பு பத்திரிகைகள் கூறியுள்ளன.

அடுத்த மாதம் முதல் வடபகுதி மிகப்பெரும் யுத்த களமாக மாறப்போவதாக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இதற்கான முன்னோடி அறிவித்தலை ஜனாதிபதி விஜேதுங்க ஐ. தே. க. மாநாட்டில் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார்.

யுத்தத்தில் புலிகளை வென்றெடுக்கவே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். யுத்தத்தால் அழியும் தமிழ் மக்களையும், இராணுவத்தினரையும் பற்றி எவரும் அலட்டிக்கொள்வதாக இல்லையே என இடதுசாரிக் கட்சித் தலைவர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

தற்போது புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியாவின் உதவியையும் பெற இலங்கை அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதால் இந்தப் போர் ஒரு உச்சக்கட்ட நிலைக்கு செல்லும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். -தி

## இராசிபலன்

6-1-1994

வியாழக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 22)

நவமி பி. ப. 2.44 வரை, சித்திரை மு. ப. 9-09 வரை, இராகுகாலம் பி. ப. 2-01 முதல் 3-31 வரை, சுபநேரம் காலை 8-1 முதல் 9-31 வரை, சித்தாமிர்தயோகம்.

மேஷம்: மித்திர லாபம், மனதில் வேகம், பிரயாசை.

இடபம்: புத்திர மேன்மை, தொழில் சிறப்பு, பணவரவு.

மிதுனம்: இடையூறு, மனக் குரோதம், அலைச்சல்.

கடகம்: அதிகாரிகள் கோபம், குடும்ப வெறுப்பு, கவலை.

சிங்கம்: காரிய சித்தி, சுப காரியம், பொருள் சேர்க்கை.

கன்னி: ஆரோக்கியமின்மை வெறுப்பு, தொழில் நஷ்டம்.

துலாம்: வாக்கு வசீகரம், சத்துரு ஜெயம், மாதர் உதவி.

விருச்சிகம்: தொழில் போட்டி, விபரீத எண்ணம், மனப் பயம்.

தனுசு: புகழ்ச் சிறப்பு, சுபபோஜனம், மேலான நிலை.

மகரம்: தொழில் லாபம், இனசன சிறப்பு, தெய்வீக செலவு.

கும்பம்: தேகபீடை, காரிய விக்கினம், அவமதிப்பு.

மீனம்: கைப்பொருள் இழப்பு, அதிக கிலேசம், குடும்பப் பகை.

— ஜோஸ்யர்.

# 7500 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மார்ச் மாதத்தினுள் பிரபல பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இந்தப் பரீட்சையில் 19 ஆயிரம் மாணவர்கள் சித்தியடைந்தனர். 7500 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படும். ஒவ்வொரு மாணவரும் மாதாந்தம் 240 ரூபாவை பெற்றுக்கொள்வர்.

கல்வி அமைச்சு வழங்கியுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைநிரப்பி தமது பாடசாலை அதிபர்மூலம் தாம் விரும்பும் பாடசாலையைக் குறிப்பிட்டு இம்மாதம் 14ம் திகதிக்கு முன்பதாக கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும். [கே-தி]

## திருவாசகம் ஓதுதல்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமான் ஆலயத்தில் எதிர்வரும் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பூசையைத் தொடர்ந்து திருவாசகம் முற்றும் ஓதுதல் நடைபெறவுள்ளது. -தி

# தனியார் வீடுகளில் பாடசாலை வகுப்புகள்

(சுன்னாகம்)

அச்சுவேலி மகாவித்தியாலய பகுதியில் ஏற்பட்ட இடநெருக்கடியால் கல்லூரிக்கு அருகில் இருக்கும் தனியார் வீடுகளிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்காலிக கட்டடங்கள் கூட நிலமின்றி இருப்பதும் மாணவர் தொகை திடீரென அதிகரித்திருந்ததுமே இதற்கான காரணமாகும்.

இதேபோன்றே இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த பல பாடசாலைகளும் தற்போது இடவசதியின்றி அல்லற்பட்டு வருகின்றனவாம். -165-தி

## கடந்த வருடம்

# மனித உரிமைமீறல் குறித்து 485 முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் இலங்கையில் அதிகளவு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் 30ம் திகதி வரை மனித உரிமை மீறல் தொடர்பாக 485 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. [இ-தி]

# கடற் படைக்கு பெருமளவில் ஆள்சேர்ப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு மேலும் படையினரைச் சேர்க்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சாதாரணகடற்படை வீரர்கள் எட்டாம் வகுப்பில் சித்தி அடைந்தால் போதுமானது என்பதுடன், விண்ணப்பப் படிவங்களை ஜனவரி 10-ந் திகதிக்குமுன் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நாகதேவன் துறையில் கடற்படையினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பைத் தொடர்ந்தே அரசாங்கம் உடனடியாக படையினரைச் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதென்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். —ஈ-தி

# முல்லை மாவட்டத்தில் 2500 ஏக்கர் வயல்கள் அழிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையால் முல்லைத்தீவுப்பகுதி வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெருமழை காரணமாக பல குளங்கள் உடைப்பெடுத்துள்ளதால் அறுவடைக்குத் தயாராக இருந்த 2500 ஏக்கர் நெல் வயல்கள் அழிவுற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பல வீடுகள் இடிந்து வீழ்ந்துவிட்டதாகவும், இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். (162-தி)

